2023 ஏப்ரல் 19]

3. கவன ஈர்ப்பு

(அ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் மற்றும் நத்தம் பகுதிகளில் நில அதிர்வு உணரப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். காந்திராஜன் மற்றும் திரு. ஐ.பி. செந்தில்குமார் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். காந்திராஜன் அவர்கள்.*

*__திரு. எஸ். காந்திராஜன்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் மற்றும் நத்தம் பகுதிகளில் நில அதிர்வு உணரப்பட்டது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை என்னுடைய சார்பிலும், மாண்புமிகு பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள் சார்பிலும் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

*__மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று உறுப்பினர்களின் மேசையின்மேல் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், வேடசந்தூர் வட்டங்களில் மற்றும் இதர இடங்களில் சமீபத்தில் ஏற்பட்ட நில அதிர்வு குறித்து அம்மாவட்ட ஆட்சியரிடமிருந்து அறிக்கை வரப்பெற்றது. இதன் தொடர்ச்சியாக, நில அதிர்வுக்கான தேசிய மையத்தின் இயக்குநர் அவர்களிடம் பாதிக்கப்பட்ட

இடங்களில் ஒரு குழு அமைத்து ஆய்வு செய்து, அதன் அறிக்கையினை அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

மேலும், சென்னை அண்ணா பல்கலைக்கழக காலநிலை மற்றும் பேரிடர் மேலாண்மை மைய இயக்குநர் மற்றும் வேலூர் தொழில்நுட்ப நிறுவன (VIT) காலநிலை மற்றும் பேரிடர் தணிப்பு மைய இயக்குநர் ஆகியோர்களிடம் திண்டுக்கல் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள நில அதிர்வு குறித்து ஒரு குழு அமைத்து ஆய்வு செய்து அதன் அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அதன்படி, வேலூர் தொழில்நுட்ப நிறுவன (VIT) காலநிலை மற்றும் பேரிடர் தணிப்பு மைய இயக்குநரால் இதுகுறித்து ஆய்வு மேற்கொள்ள சிறப்பு பேராசிரியர் நியமனம் செய்யப்பட்டு ஆய்வு மேற்கொண்டுள்ளார். மேலும், சென்னை அண்ணா பல்கலைக்கழக காலநிலை மற்றும் பேரிடர் மேலாண்மை இயக்குநரால் இதுகுறித்து ஆய்வு செய்ய நான்கு நபர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, மேற்படி குழுவால் 1–4–2023 அன்று திண்டுக்கல் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட இடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். காந்திராஜன் அவர்கள்.

முற்பகல் 11–25

திரு. எஸ். காந்திராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், தலைநகர் திண்டுக்கல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சுமார் 25 கி.மீ. தொலைவிற்குட்பட்ட எனது வேடசந்தூர் தொகுதியில் அமைந்துள்ள வேடசந்தூர் மற்றும் வடமதுரை ஒன்றியங்கள், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியின் வடக்கு பகுதியான ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தின் கிழக்குப் பகுதி, நத்தம் தொகுதிக்குட்பட்ட சாணார்பட்டி ஒன்றியம் போன்ற பல பகுதிகளில் திடீர், திடீரென்று பயங்கரமான அளவில் ஒரு வெடிச்சத்தம் கேட்பது தொடர்ந்து ஏற்பட்டு வருகிறது. அந்த வகையில், கடந்த மாதம் 18–3–2023 அன்று காலை சுமார் 11 மணியளவில் கதவு, ஜன்னல்கள் அதிரும்வண்ணம்

2023 ஏப்ரல் 19] [திரு. எஸ். காந்திராஜன்]

நிலநடுக்கம் போன்ற வெடிச் சத்தம் திண்டுக்கல் ஆர்.எம். காலனியில் உள்ள எனது வீடு மற்றும் அருகிலுள்ள வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளில் உணரப்பட்டது. அங்கு வசித்துவரும் பொதுமக்கள் குழந்தைகளோடு வீடுகளிலிருந்து வெளியேறி பதற்றத்துடனும், பயத்துடனும் தெருவுக்கு ஓடிவந்தனர் என்பதிலிருந்து இது எவ்வளவு சக்திவாய்ந்த வெடிச் சத்தம் என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடியும். இங்கு வெளிவருகிற தினமலர், தினத்தந்தி, தி இந்து போன்ற முக்கிய நாளிதழ்களில் இந்தச் செய்தி வெளிவந்தது. இது இயற்கையாக நடக்கின்ற நிகழ்வா அல்லது மனிதர்களால் உருவாக்கப்படுகின்ற செயல்களா என்பதை சம்பந்தப்பட்ட துறையின் வல்லுநர்கள் மூலமாக விரைந்து அறிந்து, தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலமாக இந்தப் பகுதி மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டும். இத்தகைய வெடிச் சத்தங்களால் எவ்வித பாதிப்பும் இல்லை என்பதை மக்கள் தெரிந்துகொண்டு அவர்களின் பயம் நீங்குகின்ற வகையில் அரசு அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, திண்டுக்கல், திண்டுக்கல்லைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த ஓராண்டில் மட்டும் தொடர்ந்து 15 முறை அதிக ஒலியுடன்கூடிய நில அதிர்வுகள் உணரப்பட்டதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை அளித்துள்ளார்கள். அதைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமென்று சொல்லி, அதற்கு வேண்டிய தகுந்த நடவடிக்கைகளையும் நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கின்றோம். அந்த அடிப்படையில், அந்தப் பகுதியில்* Mines *ஏதாவது இருக்கிறதா என்பதையும் நாங்கள் ஆராய்ந்து பார்த்தோம். அந்தப் பகுதியில்* Mines *இருக்குமென்று சொன்னால், வெடி வைக்கின்றபோது அதிர்வு வரும் என்று பார்த்தோம். அப்படி அந்தப் பகுதியில்* Mines *எதுவும் இல்லை. ஆகவே, என்னுடைய துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் மூலமாக நில அதிர்வுக்கான தேசிய மையத்தின்*

இயக்குநர் அவர்களையும், அண்ணா பல்கலைக்கழகத்தின் பேரிடர் மேலாண்மை மைய இயக்குநர் அவர்களையும், வேலூர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பேரிடர் தணிப்பு மைய இயக்குநர் அவர்களையும் ஒரு கமிட்டியாக அமைத்து எதற்காக இந்த வெடிச் சத்தம் வருகிறது என்பதை ஆராயச் சொன்னோம். அங்கே Mines-ம் இல்லாமல் இயற்கையாக அந்தப் பகுதியிலே வருகிறது என்று சொன்னால் என்ன காரணம் என்று அறிவதற்காகக் கமிட்டி அமைத்ததன் அடிப்படையில் எங்களுக்கு ஓர் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

அதில் பார்த்தோமென்று சொன்னால், நம்முடைய திண்டுக்கல் மாவட்டம், நில அதிர்வில் தரம் 2 அல்லது 3-வது வரிசைகளில் உள்ளது என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். 2, 3-ல் உள்ளதால் அதன்மூலம் நிலநடுக்கம் வருவதற்கான வாய்ப்பு இல்லையென்றும் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும், கடைசியாக வரவேண்டிய அந்த அறிக்கையைப் பொறுத்து, அதன்மீது தகுந்த நடவடிக்கை எடுத்து மக்களுக்குப் பயமில்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டிய பணியை நிச்சயமாக அரசு செய்யும். குறிப்பாக நில அதிர்வுக்கான தேசிய மையத்தின் நிபுணர்களை வரவழைத்து அதற்கு என்ன காரணம் என்பதையெல்லாம் ஆராய்ந்து தகுந்த நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். காந்திராஜன் அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. எஸ். காந்திராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விரிவான விளக்கத்திற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே, இதுசம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்களிடம் விவரம் கேட்டளவில் அவர்களும் இந்த வெடிச் சத்தம் எதனால் ஏற்படுகிறது என்பதை ஆராய அனுமதி கேட்டுள்ளோம்; இதுவரை தெளிவான விளக்கமளிக்க இயலாத நிலை உள்ளதாகத் தெரிவித்தார்கள். அதனுடைய அடிப்படையில்தான் நான் கூடுதலாகக் கேள்விகளை இங்கே கேட்டிருக்கின்றேன். வருமுன் காப்போம் என்னும் சீரிய தாரக மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு

2023 ஏப்ரல் 19] [திரு. எஸ். காந்திராஜன்]

எதிர்காலத்தில் இப்பகுதி பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்தைப்போன்று துறையின் வல்லுநர்களின் மூலமாக நடவடிக்கையை மேற்கொண்டு இந்த வெடிச் சத்தம் மற்றும் நில அதிர்வுக்கான தீர்வை விரைந்து காண வேண்டுமென்று மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது சார்பிலும், மாண்புமிகு பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்களின் சார்பிலும் தங்கள் வாயிலாகத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–30

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான், மாவட்ட ஆட்சித் தலைவரிடம், பல தடவை வெடிச் சத்தம் வருவதற்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து பார்க்கச் சொன்னதில், அந்தப் பகுதி முழுவதிலும் mines இல்லை; ஆனால், சத்தம் வருகிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவரும் சொல்லியிருக்கிறார். சென்ற ஆண்டில் மட்டும் 15 தடவை இதேபோல வந்திருக்கிறது என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எங்களுக்குக் கடிதம் மூலமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இப்போது எங்களுடைய கவனம், தேசிய நிலநடுக்க மையத்தின் நிபுணர்களை வைத்து ஆராய்ச்சி செய்தால்தான் அதற்கு ஒரு தீர்வு வரும் என முடிவு செய்து அதற்கு வேண்டிய அறிக்கை தயார் செய்வதற்கு நிபுணர்களை அழைத்திருக்கிறோம். அவர்கள் வந்து அறிக்கை கொடுக்கும் நேரத்தில் இதற்கொரு முடிவான பதிலை அல்லது நிறைவான வேலைகளை இந்த அரசாங்கம் செய்து கொடுக்கும்.*

(ஆ) வணிக வரி நிலுவையை வசூலிக்க சமாதான் திட்டம் கொண்டு வருவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.*